# கோவை மாவட்டம்

**11** பதிவு எண். [ ]

## முதல் இடைப்பருவத் தேர்வு - 2022

## உயிரியல்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

**பகுதி - I (உயிரி தாவரவியல்)**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5 x 1 = 5**

1. ஆர்க்கியோபாக்டீரியம் எது?
அ) அசட்டோபாக்டர் ஆ) எர்வீனியா இ) டிரிப்போனிமா
ஈ) மெத்தனோபாக்டீரியம்

2. சரியாகப் பொருந்திய இணையினைக் கண்டுபிடி.

| | | |
|---|---|---|
| அ) ஆக்டினோமைசீட்ஸ் | – | தாமதித்த வெப்பு நோய் |
| ஆ) மைக்கோபிளாஸ்மா | – | கழலைத்தாடை நோய் |
| இ) பாக்டீரியங்கள் | – | நுனிக் கழலை நோய் |
| ஈ) பூஞ்சைகள் | – | சந்தனக் கூர்நுனி நோய் |

3. குடல் மற்றும் இரைப்பை புண்களை ஏற்படுத்தும் பாக்டீரியா
அ) விப்ரியோ காலரே ஆ) ஹெலிகோபாக்டர் பைலோரி
இ) சால்மோனெல்லா டைஃபி ஈ) கார்னிபாக்டீரியம் டிப்தீரியே

4. நீலப்பசும்பாசிகளோடு தொடர்புடைய சரியான கூற்று எது?
அ) நகர்வதற்கான உறுப்புகள் இல்லை ஆ) செல்சுவரில் செல்லுலோஸ் காணப்படுவதில்லை இ) உடலத்தைச் சுற்றி மியூசிலேஜ் காணப்படுவதில்லை
ஈ) ஃபுளோரிடியன் தரசம் காணப்படுகிறது

5. பூஞ்சையின் செல்சுவர் எதனால் ஆனது?
அ) செல்லுலோஸ் ஆ) பெக்டின் இ) கைட்டின் ஈ) பெப்டிடோகிளைகான்

**II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3 x 2 = 6**

6. வைரசினால் மனிதனுக்கு ஏற்படும் நோய்கள் எவையேனும் நான்கினை எழுதுக.
7. பிளாஸ்மிட் என்றால் என்ன?
8. நான்கு வகையான ஆஸ்கோகனியுருப்புகளை எழுதுக.
9. சீனோசைட்டிக் மைசீலியம் என்றால் என்ன?
10. விரியான்கள் என்றால் என்ன?

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3 x 3 = 9**

11. மொனிராவின் சிறப்புப் பண்புகளை எழுதுக.
12. வைரஸ்களின் உயிருள்ள மற்றும் உயிரற்ற பண்புகளை எழுதுக.
13. மேக்னடோசோம்கள் என்றால் என்ன?
14. பூஞ்சைவேரிகளின் முக்கியத்துவங்களை எழுதுக.
15. வளர் மாற்றம் சிதை மாற்றம் வேறுபடுத்துக.

**IV. விரிவான விடையளி. 1 x 5 = 5**

16. லைக்கண்களின் பொதுப்பண்புகளை எழுதுக. **(அல்லது)**
கிராம் சாயமேற்றும் முறையின் படிநிலைகளைக் காட்டும் வரைபடம் வரைக.

## பகுதி - II (உயிரி விலங்கியல்)

### பிரிவு – அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5 x 1 = 5

1. வகைப்பாட்டின் அடிப்படை அலகு
அ) டாக்சான் ஆ) வரிசை இ) சிற்றினம் ஈ) பேரினம்

2. பல்லுயிர் என்ற பதத்தைச் சூட்டியவர் யார்? அ) வால்டர் ரோசன்
ஆ) எ.ஜி. டான்ஸ்லே இ) அரிஸ்டாட்டில் ஈ) எ.பி.டி. காண்டோல்

3. பெரும்பாலான சீலன்ட்ரேட்டுகளில் காணப்படும் பண்பு
அ) மெட்டாமெரிசம் ஆ) மெட்டாஜெனிசிஸ் இ) தலையாக்கம் ஈ) தோலுரித்தல்

4. கீழ்கண்டவற்றுள் எது போலியான உடற்குழி உடையவை?
அ) போரிஃபெரா ஆ) டீனோபோரியா இ) அன்னலிடா ஈ) ஆஸ்கெல்மின்தஸ்

5. எந்த இணை சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது?
அ) ஃபைசாலியா – போர்த்துகீசிய படைவீரன்
ஆ) பென்னாடுலா – கடல் விசிறி
இ) ஆடம்சியா – கடல் பேனா
ஈ) கார்கோனியா – கடல் சாமந்தி

### பிரிவு – ஆ

**II. எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளி.** 3 x 2 = 6

6. பயன்தரும் பாக்டீரியா என்றால் என்ன? ஒரு உதாரணம் தருக.
7. பாரம்பரிய வகைப்பாட்டு கருவிகள் யாவை?
8. ஈரடுக்கு விலங்குகள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தருக.
9. சுடர் செல்கள் என்றால் என்ன?
10. பெரும்பாலான விலங்குகளில் காணப்படும் பொதுவான நான்கு பண்புகளைக் குறிப்பிடுக.

### பிரிவு – இ

**III. எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளி.** 3 x 3 = 9

11. இருசொற் பெயரிடும் முறை என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விவரி.
12. எக்ஸ்ட்ரிமோஃபைல்ஸ் என்றால் என்ன? எவ்வகை உயிரினங்கள் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?
13. பிளவு உடற்குழியை (Schizocoelom) உணவுப்பாதை உடற்குழியுடன் (Enterocoelom) ஒப்பிடுக.
14. நிடோபிளாஸ்ட் என்றால் என்ன? அதன் பணிகள் யாவை?
15. கணுக்காலிகளில் காணப்படும் சுவாச உறுப்புகள் மூன்றினையும் கழிவு நீக்க உறுப்புகள் மூன்றினையும் எழுதுக.

### பிரிவு – ஈ

**IV. விரிவான விடையளி.** 1 x 5 = 5

16. பெயரிடுவதற்கான அடிப்படை விதிகளை எழுதுக. **(அல்லது)**
தொகுதி அன்னலிடாவின் பொதுப்பண்புகளை எழுதுக.